# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டு – மதிப்பீட்டுத் தாள்

# 2021 – 2022

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 4

சுட்டெண்:........................................................................ நேரம்: 120 மணித்துளிகள்

www.tamiledc.com

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TEDC

1) **பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. உயிர் எழுத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு ________________ .
( ஔ, க், ப் )

2. ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் வாடி இருப்பது __________.
( கிளி, வாத்து, கொக்கு )

3. நான் உனது நூலை ______________ திருப்பித் தர வேண்டும்?
( அப்பொழுது, எப்பொழுது, இப்பொழுது )

4. எமது மங்கல நிகழ்வுகளில் முதன்மையான இடத்தைப் பெறும் இசைக்கருவி ______________ .
( மேளம், தாளம், ஏழில் )

5. அவன் கடுஞ்சினத்தால் பற்களை ______________ எனக் கடித்தான்.
( பறபற, நறநற, குறுகுறு )

6. உடுக்கை என்பது ________________ .
( படை, மடை, ஆடை )

7. கற்கக் கற்கப் பெருகுவது ______________ .
( அறிவு, செல்வம், நீர் )

8. ஆடிப்பிறப்பன்று ______________ எல்லோரும் ஆடிக்கூழ் காய்ச்சிக் கூடியிருந்து குடிப்பர்.
( காலையில், மாலையில், இரவில் )

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

9. வருகிற சனிக்கிழமை தமிழ்த்திறன் போட்டி ______________ .

( நடைபெறும், நடைபெறுகின்றது, நடைபெற்றது )

10. இனிய நண்பனை இடுக்கணில் அறியலாம். இது ______________ .

( நொடி, குறள், பழமொழி )

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

11. அறுவடை என்பது ______________ .

( கதிர்அறுத்தல், விதைத்தல், கட்டுதல் )

12. மெய்யெழுத்துகள் ______________ .

( 12, 247, 18 )

13. முழவுகளைத் ______________ என்பர்.

( துளைக்கருவிகள், தோற்கருவிகள், நரம்புக்கருவிகள் )

14. சிறுவனின் கையெழுத்து ______________ உள்ளது.

( மணிமணியாக, வண்ணவண்ணமாக, பாளம்பாளமாக )

15. காலம் தாழ்த்திச் சிங்கத்திடம் சென்ற விலங்கு ______________.

( குரங்கு, முயல், நரி )

16. போர்முரசு முழங்க, அரசன் படை ______________ ச் சென்றான் .

( நடத்தி, கடந்து , செய்து )

TEDC

17. தமிழின் இலக்கண நூல் ________________ .

( நாலடியார், திருக்குறள், தொல்காப்பியம் )

18. __________________ தமிழை விரும்பிப் படி!

( நான், நீ, அவன் )

19. கனகனையும் விசயனையும் கல்லைச் சுமந்து வரச் செய்த மன்னன் __________________ .

( சேரன் செங்குட்டுவன், அதியர்மான், சங்கிலியன் )

20. 400 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ________________ .

( நாணூறு, நானூறு, நாநூறு )

21. முக்கனிகளில் ஒன்று ____________________ .

( மா, கொய்யா, விளா )

22. காலை என்பதன் எதிர்ச்சொல் __________________ .

( நண்பகல், மாலை, இரவு )

23. **ஒலிவட்டு:**

நாடுகாத்த சிறுவன் என அழைக்கப்பட்டவன்________________ .

( பிரிங்கர், மருதுபாண்டியன், ஆழிக்குமரன் )

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

24. “கல்வி கரையில கற்பவர் நாள்சில” என்ற பாடல் இடம்பெற்ற நூல் ________________ .

( நல்வழி, மூதுரை, நாலடியார் )

25. **நொடி:**

ஐந்து வீட்டுக்கொரு முற்றம். இது ______________ .

( உள்ளங்கை, நாக்கு, தலை )

26. சிங்கம் முயலைப் பார்த்து ________________ .

( கத்தியது , சீறியது, முழங்கியது )

27. நீ உனது பொருட்களை மட்டும் எடு! அவன் ______________ பொருட்களை எடுப்பான்.

( எனது, தனது, உனது )

28. திருக்குறள் ________________ அடிகளைக் கொண்டது.

( இரண்டு, நான்கு, எட்டு )

29. இடர்வரும் வேளையில் உதவாத நண்பனை ______________ .

( விரும்பு, நம்பாதே, நம்பு )

30. விழாக்கள் மூலம் ______________ வளர்த்துக் கொள்ளலாம்.

( பகைமையை, ஒற்றுமையை, வேற்றுமையை )

புள்ளிகள் 30

**2) கீறிட்ட இடத்தை மிகப்பொருத்தமான சொல்லால் நிரப்புக.**

| | | |
|---|---|---|
| பளபள | படிப்படியாக | உள்ளும்புறமும் |
| விடியவிடிய | கீச்கீச் | |

1. பொருட்களின் விலை ______________ ஏறியது.
2. மாதவியின் பட்டுப் பாவாடை ______________ என மின்னியது.
3. மாணவன் தேர்வுக்கு ______________ப் படித்தான்.
4. ______________ தூயவனே உயர்ந்த மாந்தன்.
5. கோழிக்குஞ்சு ______________ என்று கத்தியது.

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

புள்ளிகள் 05

**3) பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதி, சொல்லியங்களை நிறைவு செய்க.**

1. ஐரோப்பிய நாடுகளில் தமிழர் செறிந்து ________________ .

2. மாவீரர்களின் நடுகற்கள் இராணுவத்தால் ________________ .

3. நான் வரைந்த ஓவியங்களை நண்பர்களிடம் ________________ .

4. **பழமொழி:** பதறாத காரியம் ________________ .

5. புலவர்கள் தமிழைத் தீந்தமிழ், செந்தமிழ் என்று

   ________________ .

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

புள்ளிகள் 10

TEDC

**4) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் நிரப்புக.**

1. மழை பெய்யும்போது ________________ தோன்றியது.
   ( வானவில், வாணவில் )

2. வாழை ஒரு முறைதான் ________________ தரும்.
   ( குலை, குழை )

3. நீ ________________ பண்டங்களை உண்ணாதே!
   ( அலுக்கடைந்த, அழுக்கடைந்த )

4. நாளை பள்ளியில் ____________ விழா நடைபெற இருக்கிறது.
   ( ஆண்டு, ஆன்டு )

5. நாங்கள் கோடைகாலத்தில் ________________ செல்வோம்.
   ( சுற்றுலா, சுற்ருலா )

புள்ளிகள் 05

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

**5) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

அது ஒரு கோடைகாலம். செடிகளில் பூக்கள் பூத்துக் குலுங்கின. தும்பி ஒன்று அங்கும் இங்கும் பறந்து திரிந்தது. அது பூக்களில் தேனைக் குடித்து மகிழ்ந்தது. ஆனால் எறும்புகளோ மிகவும் சுறுசுறுப்பாக ஊர்ந்து சென்று கொண்டிருந்தன. எறும்புகள் உணவை ஓர் இடத்தில் சேமித்து வைத்தன. இதைக் கண்ட தும்பி எறும்புகளைப் பார்த்து "ஏன் இவ்வளவு துன்பப்படுகிறீர்கள்? என்னைப்போல் இருப்பதை உண்டுவிட்டு மகிழ்ச்சியாக வாழலாமே" என்று கூறியது. எறும்புகள் அதை ஏற்றுக் கொள்ளாமல் உணவைச் சேமித்து வைத்தன. மழைக்காலம் வந்தது. கடும் மழையும் பெய்தது. தும்பி உணவு இல்லாமல் பசியால் வாடியது. அப்பொழுதுதான் தும்பி தன் தவறை உணர்ந்தது. தானும் எறும்புகளைப் போல உணவைச் சேமித்து வைத்திருந்தால் தனக்கு இந்தநிலை வந்திருக்காதே என்று மனம் வருந்தியது. சேமிப்பு என்றும் நன்மை தரும்.

1. செடிகள் பூத்துக் குலுங்கும் காலம் எது?

___________________________________________

2. எது பூக்களில் தேனைக் குடித்து மகிழ்ந்தது?

___________________________________________

3. உணவைச் சேமித்து வைத்தவை எவை?

___________________________________________

___________________________________________

4. தும்பி ஏன் வாடியது?

___________________________________________

5. என்றும் நன்மை தருவது எது?

___________________________________________

புள்ளிகள் 10

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

## 6) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.

| | | |
|---|---|---|
| ஏழு | பிறந்தார் | முதலாவது |
| சிறந்த | ஊருக்கு | |

வல்வெட்டித்துறை என்னும் ஊரில் 1943 ஆம் ஆண்டு ஆனந்தன் ______________ . இவரது தந்தையார் விவேகானந்தன். தாயார் இராசரத்தினம்மாள். இவர் ______________ நீச்சல் வீரன். இவரது ______________ வெற்றிப்பேறுகள் உலக வெற்றிப்பேறு நூலில் இடம்பெற்றுள்ளன. இவர் பாக்குநீரிணை வழியாக தலைமன்னாரிலிருந்து தமிழகத்திலுள்ள தனுசுக்கோடி என்னும் ______________ நீந்திச் சென்றார். இதுவே இவரது ______________ வெற்றிப்பேறாகும். இதன்பின் இவர் ஆழிக்குமரன் ஆனந்தன் என அழைக்கப்பட்டார்.

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

புள்ளிகள் 10

7) பாடநூல் வினாக்களுக்கு விடை தருக.

1. திருமண விழாக்களில் கொட்டும் முரசு எது?

______________________________

______________________________

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

2. திராவிட மொழிகளின் மூலமொழி எது?

______________________________

______________________________

3. முதலெழுத்துகள் எத்தனை?

______________________________

______________________________

4. கூலங்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

______________________________

______________________________

5. மிருதங்கத்தின் பண்டைய பெயர் என்ன?

______________________________

______________________________

TEDC

புள்ளிகள் 10

8) **தரப்பட்ட வினாக்களுக்குரிய விடைகளைக் கட்டங்களிலிருந்து தெரிவு செய்து எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| சி | உ | ங் | ல | ழ |
| நூ | எ | | று | ன் |
| ச | | க | ம் | ர் |
| கி | த் | நு | கு | தை |
| | டி | வ | ளி | |

**எ -கா**

மின்குமிழைக் கண்டுபிடித்தவர் ______எடிசன்______.

1. தமிழீழத்தின் தேசிய விலங்கு ____________________ .

2. நூல்களை எடுத்து வாசிக்கும் இடம் ____________________ .

3. உணவுப் பொருட்களை உற்பத்தி செய்பவர்
____________________ .

4. பனையில் இருந்து பெறப்படுவது ____________________ .

5. பேசப்பழக்கினால் பேசும் பறவை ____________________ .

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC

புள்ளிகள் 05

9) தரப்பட்டுள்ள படத்தை வைத்து 30 சொற்களுக்குக் குறையாமல் கதையைத் தொடர்ந்து எழுதுக.



இரண்டு சிறுவர்கள் மிதியுந்தில் சென்றுகொண்டிருந்தனர்.......

புள்ளிகள் 15

TEDC